

# 60 அருந்தவம்

கந்தையா அருந்தவபாலன்

மணிவிழாச் சிறப்புமலர் - 2016

# அருந்தவம்

## மணிவிழா மலர்

2016



# அருந்தவம்
# மணிவிழா மலர்

**வெளியீடு**
மணிவிழாக்குழு

**பதிப்பாசிரியர்கள்**
**ச. லலீசன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.
**அ.அகிலதாஸ்,**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

**வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும்**
கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**பக்கங்கள்**
198

இந்த மலரில் வெளியிடப்பட்டிருக்கும் கட்டுரைகள் மற்றும் ஆக்கங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு அவற்றை ஆக்கியோர்களே பொறுப்புடையவர்கள்.



# இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் மனித வள அபிவிருத்திச் சுட்டிகளின் பங்களிப்பு








சிதம்பரநாதன் உதயகுமார்
BA Econ (Hons), MA. M.Phil.
தலைவர்,
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திருமதி கௌதமி உதயகுமார்,
BA Econ (Hons), PGDE, MEd.
இ.ஆ.சே. 2-I,
யா/ அல்லைப்பிட்டி பராசக்தி
வித்தியாலயம்,
கல்வி வலயம்
தீவகம் .


1950 தொடக்கம் 1980 வரையிலான காலப்பகுதியில் அபிவிருத்தி தொடர்பாக அவதானிக்கப்பட்ட மிக முக்கியமான விடயம் யாதெனில் பல நாடுகளில் அவை அடைந்து கொண்ட பொருளாதார வளர்ச்சியின் பலாபலன்கள் அந்நாட்டு மக்களைச் சென்றடையாமை என்பதாகும். வறுமை, வேலையின்மை, மனிதஉரிமை மீறல்கள், சுற்றுச் சூழலின் அழிவு போன்ற விடயங்களால் உலக நாடுகள் பிரச்சினைகளை அனுபவிக்கத் தொடங்கின. அபிவிருத்திக்கும் மக்களுக்குமிடையே ஒரு இடைவெளி அவதானிக்கப்பட்டது. இது மனித அபிவிருத்தியின் நிலைப்பாடு பற்றிச் சிந்திப்பதற்குக் காரணமாக அமைந்தது.

கடந்த நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் மனித அபிவிருத்தி தொடர்பான எண்ணக்கரு வளர்ச்சியடைந்தது. அபிவிருத்தி தொடர்பான கருத்தியல் வளர்ச்சியில் மனிதவள அபிவிருத்தி தொடர்பான சிந்தனை ஒரு புதிய பரிமாணமாக அமைந்தது. உலகின் பௌதீக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் மனித அபிவிருத்திக்குமிடையே சமச்சீரற்ற தொடர்புகள் காணப்படுவதாக மனித வள அறிக்கைகள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டது.

1990 ஆம் ஆண்டுகளில் மனித அபிவிருத்தி தொடர்பான சிந்தனைகள் சர்வதேச அரங்குகளில் முன்வைக்கப்பட்டன.

பல நாடுகளின் அனுபவங்களிலிருந்து பொருளாதார அபிவிருத்திக்கும் மனித அபிவிருத்திக்கும்இடையேபாரியஇடைவெளி அவதானிக்கப்பட்டன. பொருளாதாரவளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றின் நலன்கள் மக்களில் பெரும்பாலானோரைச் சென்றடையவில்லை. உண்மையில் அபிவிருத்திச் செயற்பாடுகள், மனித மூல வளத்தை மேலும் அபிவிருத்தி அடையக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்யத் தவறிவிட்டன. அபிவிருத்திக்கும் மனித அபிவிருத்திக்கும் இடையிலான இடைவெளி நீக்கப்பட வேண்டும் என்பதில் மனித அபிவிருத்திப் பொருளியலாளர்கள் மிகக் கவனமாக இருந்தனர்.

அபிவிருத்தி நடவடிக்கைகள் மனிதனுடைய தெரிவுகளை விரிவுபடுத்த வேண்டும் என்பது மனித அபிவிருத்திப் பொருளியலாளர்களின் அடிப்படை எண்ணக்கருவாக இருந்தது.

பொருளாதார வளர்ச்சியின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக மனித வள அபிவிருத்தி காணப்படுகின்றது. மனித அபிவிருத்தியின் அனைத்துப் பரிமாணங்களையும் உயர்த்துவதே சிறந்த பொருளாதார வளர்ச்சியின் அறிகுறியாகும். ஆனால் பெரும்பாலான நாடுகளின் கடந்த நான்கு தசாப்தகால பொருளாதார வளர்ச்சி அனுபவங்கள் அந்நாடுகள் அவற்றின் சரியான இலக்குகளை அடையத் தவறியுள்ளன என்பதை எடுத்துக்காட்டின. சிறந்த பொருளாதார வளர்ச்சி காணப்பட்ட போதும் அவ்வளர்ச்சியின் நன்மைகள் அனைத்து மக்களையும் சரியான முறை யில் சென்றடையாமையினால் அப் பொருளாதாரங்களில் பொருளாதார சமத்துவம் பாதிக்கப்பட்டு மனித அபிவிருத்தி மட்டம் குறைவாகக் காணப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சிக்கும் மனித அபிவிருத்திக்கும் இடையே தன்னிச்சையான தொடர்புகள் காணப்படவில்லை என்பதனை பல நாடுகளின் கடந்த கால அனுபவங்கள் காட்டிநிற்கின்றன. ஒரு நாடு பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு மனித வளத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற வாதம் இரு அடிப்படைகளைக் கொண்டிருந்தது.

முதலாவது எண்ணக்கரு உலகில் நடைபெறும் அனைத்து அபிவிருத்தி முயற்சிகளினதும் பெறுபேறுகளை அனுபவிக்கும் உரிமை மனிதர்களுக்குரியது என்ற கருத்தைக் கொண்டுள்ளது. சூழல் பொருளியல் கண்ணோட்டத்தில் இதனை ஆதிக்க உரிமை என்பர். எனவே அபிவிருத்தி தொடர்பான அனைத்துக் கொள்கைத் திட்டமிடல்களிலும் மனிதவளம் முதன்மைப்படுத்தப்படல் வேண்டும். மேலும் அபிவிருத்தியின் அடைவுகள் முழு மனித சமுதாயத்தையும் பரவலான முறையில் சென்றடைவதற்குரிய வழிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும் என்பது மனித அபிவிருத்திப் பொருளியலாளர்களின் எதிர்பார்க்கையாகும்.

இரண்டாவது எண்ணக்கரு உலக அபிவிருத்திக்கு மனித வளத்தின் பங்களிப்பை வலியுறுத்தும் ஒன்றாகும். மனித வளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் பொருளதார அபிவிருத்திச் செயன்முறைகளைச் சிறந்த முறையில் இயக்க முடியும் என்பது மனித அபிவிருத்திப் பொருளியலாளர்களினால் எதிர்பார்க்கப்படும் ஒரு விடயமாகும். இவர்கள் பின்வரும் இருபக்க அணுகு முறைகள் மூலம் தமது வாதத்தை வலியுறுத்துகின்றனர்.

1. பங்களிப்பு தொடர்பான மனித வள எண்ணக்கரு. இதனை நிரம்பல் பக்க அணுகுமுறை எனவும் கூறலாம்.
2. பயன்பாடு தொடர்பான மனித வள அணுகுமுறை. இதனைக் கேள்விப் பக்க அணுகுமுறை எனவும் கூறுவர்.

இவ்விரு கருத்துக்களும் மனிதனை ஒரு சொத்தாக அல்லது மூலதனமாகக் கருதி வெளியிடப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் மிகப்பெரும் சொத்து மனிதனாகும்.

ஒரு நாட்டின் மனிதவளம் அந்நாடு விரும்புகின்ற இலக்குகளை அடையக்கூடிய தகைமையற்றதாக இருக்குமாயின் அந்நாடு அதன் வளங்களிலிருந்து சிறந்த விளைவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாததாக இருக்கும் என ஏ.எஸ்.பா. தா (A.S.Bad tha) என்பவர் சுட்டிக்காட்டுகின்றார்.

மனித வளத்தின் பெறுமதி, முக்கியத்துவம் என்பன இரு முகத்தன்மை கொண்டிருப்பதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒன்று மனித மூலதனத்தின் பொருளாதாரப் பரிமாணத்தை விளக்குதல். மற்றொன்று அதன் சமூகப் பரிமாணத்தை விளக்குவதாகும். பின்வரும் விளக்கப்படம் மனித வளத்தின் இருமுகத் தன்மையைக் காட்டுகின்றது.

| மனித அபிவிருத்தி | |
|---|---|
| **நிரம்பல் பக்கம்** | **கேள்விப் பக்கம்** |
| உள்ளீடு | நுகர்வு |
| அபிவிருத்தி செயன்முறை | அபிவிருத்தியின் பயனாளிகள் |
| பொருளாதார உபகரணங்கள் | நுகர்வை ஊக்குவித்தல் மீதான முதலீடு |
| மனித மூலதனத்தின் பொருளாதார | மனித மூலதனத்தின் |
| பரிமாற்றத்தை வளப்படுத்துதல் | சமூப் பரிமாற்றத்தை வளப்படுத்துதல் |

நிரம்பல் பக்க அணுகுமுறையானது மனித வளத்தைச் சிறந்த உள்ளீடாக அதாவது மனித மூலதனமாகக் கருதி பொருளாதாரத்தை இயக்குவதற்கான ஒரு முக்கிய உள்ளீடாக் கொள்ளுதல் அணுகுமுறையாகும். இதனால் இதனை மானிடமூலதன அணுகுமுறை(Human capital approach) எனக்கூறுவர். கேள்விப் பக்க அணுகுமுறையானது அபிவிருத்தியின் பயனாளியாக மனித வளத்தைக் கருதி நுகர்வின் மூலம் அபிவிருத்திக்குத் தேவையான தூண்டுதலை வழங்குவதை ஆராய்கின்றது. மேலும் அபிவிருத்தியின் அடைவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் சமூகப் பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதனால் இதனை சமூக அபிவிருத்தி அணுகுமுறை (Social development approach) எனக் கூறுவர்.

இவ்விரு அணுகுமுறைகளும் மனித அபிவிருத்தியின் இருவேறு பரிமாணங்களாகக் கொள்ளப்படுகின்றன. மிக நீண்டகாலமாக இவ்விரு அணுகுமுறைகளும் இருந்து வந்துள்ளன. எனினும் மனித அபிவிருத்தி தொடர்பான புதிய அணுகுமுறை இவ்விரு அணுகுமுறைகளை இணைப்பதையும் அவற்றிற்கிடையே சமாந்தரமான வளர்ச்சியைப் பேணுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

மனித மூலவள அபிவிருத்தி தொடர்பான புதிய கண்டுபிடிப்புக்கள் முடிவுக்கும் வழிமுறைக்குமிடையிலான வித்தியாசங்களையும் பொருளாதாரப் பரிமாணங்களுக்கும் சமூகப்பரிமாணங்களுக்குமிடையிலான வித்தியாசங்களையும் பகுப்பாய்வு செய்கின்றன. அபிவிருத்தியின் பயனாளி, அபிவிருத்தியின் பங்காளி என்ற இரு அடிப்படைகளையும் இணைப்பதன் மூலம் மனித வள அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே மனித வள அபிவிருத்தி தொடர்பான புதிய அணுகுமுறையின் இலக்காக உள்ளது.

உறுதியான ஒரு சமூக அடித்தளம் இன்றி பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து கொள்வது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஏனெனில் சமூக அபிவிருத்தியானது பொருளாதார பங்கேற்பில் தாக்கத்தை வழங்குகின்றது. பொருளாதாரப் பங்கேற்பு

சமூக அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்து கின்றது. அபிவிருத்திக்குச் சாதகமான தன்மைகளைக்கொண்ட மனித வளம் பாரிய பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச் செல்கின்றது. புதிய கைத்தொழில் நாடுகளாகிய மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளின் அபிவிருத்தி அனுபவங்கள் மனித வள அபிவிருத்தியின் பொருளாதாரப் பங்களிப்புக்குச் சிறந்த உதாரணங்களாக உள்ளன.

1960 தொடக்கம் 1990 வரையிலான காலப் பகுதியின் உலக அபிவிருத்தி வாய்ப்பாடுகள் மனித அபிவிருத்தி தொடர்பான பல முரண் பட்ட அனுபங்களை வெளியிட்டன. மூன்று தசாப்தங்களுக்குரிய அபிவிருத்திச் சூத்திரமானது ஒவ்வொரு தசாப்தங்களுக்குரிய அபிவிருத்தி இலக்குகள், அக்காலப்பகுதியில் எதிர் நோக்கிய தடங்கல்கள், அத்தடங்கல் களைக் கையாள்வதற் காக முன்வைக்கப்பட்ட யுக்திகள், இவற்றுக்கான மாற்று வாய்ப்புக்கள் என்பவற்றை அடிப் படையாகக் கொண்டி ருந்தது.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பிற்பட்ட இரு தசாப்தங்களில் பொருளாதார வளர்ச்சி உலக நாடுகளின் முக்கிய இலக்காக இருந்தது. பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதில் வளர்முக நாடுகளில் உள்நாட்டு மூலதனவாக்கம் பிரதான தடையாக இருந்தது. இத்தடையை நீக்குவதற்கு வெளிநாட்டு முதலீடுகளும் உதவிகளும் பிரதான மாற்று யுக்திகளாக முன்வைக்கப்பட்டன. இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவிய அதே வேளை நவகாலனித்துவப் பாதிப்புக் களையும் ஏற்படுத்தியது. போல்பரன், சஅமீன், அன்ட்ரூ குண்டர் பிராங் போன்றவர்களால் முன்வைக்கப்பட்ட நவ மார்க்ஸீய தங்கிநிற்றல் கோட்பாடும் சுற்றயல் - மைய அணுகுமுறையும் வளர்முக நாடுகளில் காணப்பட்ட நவ காலனித்துவத்தை வெளிப்படுத்தும் அணுகு முறைகளாக இருந்தன.

1970 தொடக்கம் 1980 களில் அமைப்பு வாதமும் 1890 - 1990 களில் நவதாராளவாதமும் அபிவிருத்திக்கான புதிய தந்திரோபாயங்களாக முன்வைக்கப்பட்டன. 1970 களில் அபிவிருத்தியின் பிரதான தடைகளான அரச தலையீடு, சந்தைத் தோல்வி, சொத்துரிமை முரண்பாடுகள், தேசியமயமாக்கல் போன்றன அடையாளம் காணப்பட்டன. வளர்முக நாடுகளில் அரச சோஸலிசம் கவர்ச்சியான அரசியல் பொருளாதாரமாக வளர்ச்சியடையத் தொடங்கியது. அதிகரித்த தங்கிநிற்றல், நவமார்க்ஸிசம் போன்ற சிந்தனைப் போக்குகள் வளர்ச்சியைத் தடைசெய்யும் காரணிகளாக இருந்தன. இக்காலப்பகுதியில் மனித மூலதன வாக்கம் பிரதான மாற்று யுக்தியாக அமைந்திருந்தது.

1980 - 1990 களில் நவதாராளவாம் வளர்ச்சியடையத் தொடங்கியது. அரச தலையீடு குறைக்கப்படல் வேண்டும் என்ற கருத்து சர்வதேச அமைப்புக்களால் வலியுறுத்தப்பட்டது. அதன் காரணமாக அரச தலையீடுகள் குறைக்கப்பட்டு அமைப்புரீதியான சீராக்கல்கள் முன்வைக் கப்பட்டன. சந்தைத் தொழிற்பாடு பிரதான மாற்று யுக்தியாக முன்வைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் மனிதமுகத்துடன் கூடிய சீராக்கங்கள் தொடர்பான பிரேரணைகள் முன் மொழியப்பட்டன.

1990 களிலான தசாப்தத்தின் அபிவிருத்தி வாய்ப்பாடுகள் மனித வள அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு என்பவற்றைப் பிரதான இலக்காகக் கொண்டிருந்தன. இவற்றை அடைந்து கொள்வதில் பொருளாதார மந்தம், அதிகரித்த வறுமை, பொருளாதாரத் தேக்கநிலை என்பன தடையாக இருந்தன. இக்காலப்பகுதியில் மனித அபிவிருத்திக்கான அடிப்படைச் தேவைகளில் முதலீடு செய்வது பிரதான யுக்தியாக அமைந்திருந்தது.

1988 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் தலைநகரான ஜகர்த்தாவில் நடைபெற்ற

ஆசியப் பிராந்தியங்களுக்கான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சமூகப் பொருளாதார ஆணைக்குழுவின் மகாநாட்டில் மனித மூல வள அபிவிருத்தி தொடர்பான ஜகர்த்தாப் பிரகடனம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இப் பிரகடனம் மனித மூலவள அபிவிருத்தியானது சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையானதும் அத்தியாவசியமானதுமான ஒரு கூறாக இருந்து வருகின்றது என்ற கருத்தை வெளிப்படுத்தியது. மேலும் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயம் செய்யும் இயற்கைப் பண்புகளும் மனித மூலதனத்தை நிர்ணயம் செய்யும் பண்புகளும் பெருமளவுக்கு ஒத்துள்ளன என இப்பிரகடனம் கருதியது.

1988இல் ஜகார்த்த மாநாடு முன்வைத்த மனிதவள அபிவிருத்திக்கான செயற்றிட்டத்தில் 106 செயலாக்க ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டன. அதன் பின்னர் உலக நாடுகளில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பொறுப்புடையவர்கள் மனித வள அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருவில் அதிக அக்கறை காட்டத் தொடங்கினர்.

ஜகர்த்தாப் பிரகடனத்தின் முக்கிய இலக்குகளில் ஒன்று நுண்பாக மட்டத்திலான மனித வள அபிவிருத்திக்கும் பெரும்பாக மட்டத்திலான அபிவிருத்திக்குமிடையே கொள்கை வகுப்பதில் இணக்கம் காண்பதாகும். தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் வீட்டுத்துறைத் தீர்மானங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட மனித அபிவிருத்திச் செயற்பாடுகள் தேசியமட்டத்திலான கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்புக்கள் தொடர்பான மனித அபிவிருத்தி செயற்பாடுகளுடன் இணைந்து செல்லக்கூடிய வகையில் கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும் என்பது இப் பிரகடனத்தின் எதிர்பார்க்கையாக இருந்தது.

ஜகர்த்தாப் பிரகடனங்கள் முன்வைத்த மற்றொரு விடயம் மனித மூலவளத்தின் உற்பத்தி சார்நிலையினை மனித மூலவளத்தின் நுகர்வுப்பங்குடன் ஒருங்கிணைக்கக் கூடியதாக மனித வள அபிவிருத்திக் கொள்கைகள் அமைந்திருக்க வேண்டும் என்பதாகும். ஏனெனில் மனித நுகர்வினை அதிகரிப்பதன் மூலம் தெரிவிக்கப்படும தனிநபர் மற்றும் குடும்ப விருப்பங்கள் உற்பத்திக்கான தூண்டுதல்களாகவும் இலாபமாகவும் அமைகின்றன. இது மனித வளம் நுகர்வினூடாக உற்பத்தியில் பங்கேற்கும் ஒரு செயற்பாடாக அமையும். மனித அபிவிருத்தியின் மூலம் இது தூண்டப்படுவதால் இதனை வெகுமதியுடன் கூடிய பங்கேற்பு எனக் கூறப்படுகின்றது.

நுகர்வுப் பண்புகளும் நடத்தைகளும் தனிநபரின் வாழ்க்கைத் தரத்தைப் பிரதிபலிக்கின்றன. வெகுமதியுடன் கூடிய பங்கேற்பு அதாவது வேலைவாய்ப்பு, சம்பளம், கூலியல்லா வருமானங்கள் போன்ற பல சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரு தொழிலாளி நுகர்வோனாக மாறும் போது பெரும்பாக மட்டத்திலான நுகர்வு மாற்றம் பெறுகின்றது. தொகை வாரியாவும் பண்பு ரீதியாகவும் நுகர்வு மாற்றம் பெறுகின்றது. இது உற்பத்திகள் மீதான கேள்வியில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதேவேளை மனித மூலவளம் மீதான முதலீடுகள் அவர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்வதனூடாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு உறுதுணையாக அமைவதுடன் நுகர்வுப் பாங்குகளையும் மாற்றியமைக்கின்றன. எனவே பொருளாதார கொள்கை வகுப்பில் நுகர்வு உற்பத்தி என்பவற்றிற்கிடையே சமாந்தரமான இணைப்பு நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதும் இப்பிரகடனத்தின் முக்கிய அம்சமாகும்.

மனித மூலவள அபிவிருத்தியின் மூலம் முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது சமூக முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் அதே வேளை, பொருளாதார வளர்ச்சி மற்றும்

அபிவிருத்தியுடன் ஒத்துப்போகக்கூடிய சமூக அபிவிருத்தியை ஏற்படுததும் வகையில் மனித மூலவள அபிவிருத்திக்கான உத்திகள் அமைந்திருத்தல் வேண்டும்.

பருநிலைப் பொருளியல் மட்டத்தில் மனித அபிவிருத்தி தொடர்பான உபாயங்களைச் செயற்படுத்துவதில் வேலைவாய்ப்பு முக்கிய காரணியாக உள்ளது. வேலைவாய்ப்பு வளங்களின் தொழில் பங்கேற்பினை உறுதிப் படுத்துகின்றது. உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்வதனூடாக பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றது. மேலும் தனி மனிதர்களின் வருமானம், வாழ்கைத்தரம், சுயமரியாதை, சமூக அந்தஸ்து போன்ற விடயங்களையும் தீர்மானின்கின்றது. எனவே தொழில் வாய்ப்புக்களின் அதிகரிப்பு நுண்பாக மட்டத்தி லும் பெரும்பாக மட்டத்திலும் மனித வள அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றது. எனவே நாடுகள் தொழில் வாய்ப்பினை உறுதிப் படுத்துதல் ஜகர்த்தாப் பிரகடனங்களில் முக்கியமானதாக அமைகின்றது.

மனித அபிவிருத்தி என்ற எண்ணக்கரு பிறக்கக்கூடிய ஒவ்வொரு மனிதனையும் வளமாகவும் பெறுமதிமிக்க சொத்தாகவும் கருதி அவற்றை வளர்த்தல், பாதுகாத்தல், பொருளாதார அபிவிருத்திக்குப் பயன் படுத்துதல் என்ற அடிப்படையில் மேற்கொள் ளக்கூடிய நடவடிக்கையின் தொழிற்பாடுகளை சுட்டிக்காட்கின்றது என மனித அபிவிருத்தி அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

மனித அபிவிருத்தியும் பொருளாதார அபிவிருத்தியும் பரஸ்பரம் தங்கிநிற்கும் தன்மை கொண்டவை என்பதையும் இவ்வெண்ணக்கரு வலியுத்துகின்றது. இவ்விடைத் தொடர்புகள் எவ்வாறு ஏற்படலாம் என்பது பற்றி வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டையும் இணைப்பதில் தன்னிச்சை யான இயக்கப்பாடுகளைக் கொண்ட சுதந்திர சந்தைப்பொறி அமைப்பு உதவமுடியும் என்ற கருத்து நடைமுறை அனுபவங்கள் மூலம் பலவீனமாக்கப்பட்டுள்ளது. இவ்விணைப்பை ஏற்படுத்துவதில் ஒரு நடுநிலையான ஊடகம் அவசியமானது என்ற கருத்து வலியுறுத் தப்பட்டுள்ளது. 1980 களில் மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, கொங்கொங் போன்ற தென்கிழக்கு மற்றும் கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார மனிதவள அபிவிருத்தி தொடர்பான அனுபவங்கள் இதனை உண்மைப்படுத்தியுள்ளன.

மனித அபிவிருத்தி மீதான பாரிய முதலீடுகளே திலைத்து நிற்கும் தன்மை யுள்ள பொருளாதார வளர்ச்சியை உறுதிப் படுத்தியுள்ளன. கிழக்காசிய நாடுகளில் இணைப்புத் தொடர்பூடகமாகப் பெரும் பாலும் அரசாங்கமே செயற்பட்டி ருப்பதைக் காணமுடிகின்றது. பழம் பொருளிய லாளர்களின் சிந்தனைகளின் தலையிடாத தன்னியக்கத் தொடர்பை விட கெயின் சியவாதத்தின் அடிப்படைகளைக் கொண்ட தலையீட்டு வாதத் தொடர்புகள் இந்நாடுகளில் பய னளித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவ்விடையத்தொடர்பு ஊடகங்களாக அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை போன்றன பங்களிப்புச் செய்ய முடியும். இப்பங்களிப்பு மூலம் பொருளாதார வளர்ச்சியை மனித நலன்களுக்கும் மனித வள அபிவிருத்தியை பொருளாதார வளர்ச் சிக்கும் பரஸ்பரம் பயன்படுத்தக்கூடிய சிறந்த திட்டமிடல்கள் இந்நாடுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளை அளவிடுவதற்காகப் பல்வேறு சுட்டிகள் பயன் படுத்தப்படுவது போல் மனித அபிவிருத்தியை அளவிடுவதற்காக மனித அபிவிருத்திச் சுட் டெண் (Human Develoment Index - HDI), பால்நிலை அபிவிருத்தி சுட்டெண் (Gender Related - Development Index - GDI) பால்நிலை மேலாதிக்க அளவீடு (Gender Empowerment Measure - GEM) ஆகிய சுட்டெண்கள்

அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. 1990 ஆம் ஆண்டு முதல் மனித அபிவிருத்தியின் பல்வேறு பகுதிகளை ஒன்று சேர்க்கப்பட்ட வகையில் அல்லது இவற்றினை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் பல விடயங்களை ஒன்று சேர்த்த சுட்டெண்களை ஐக்கிய நாடுகள் சபை அறிமுகம் செய்துள்ளது. ஏனைய சுட்டெண்கள், புள்ளி விபரக் குறிகாட்டிகளை விட மனித அபிவிருத்திச் சுட்டெண் ஆழமான கருத்துக்களைக் கொண்டதாக அமைக்கப்படுள்ளது.

வருமான அளவீடுகளை மனித அபிவிருத்தியின் அடிப்படையாகக் கொள்வதைவிட விரிவான உள்ளடக்கங்களை மனித அபிவிருத்திச் சுட்டெண் கொண்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) பொருளாதார நலன்களை அளவிடுவதற்கான ஒற்றையான குறிகாட்டியாக உள்ளது. இச்சுட்டெண் மனித அபிவிருத்தியை அளவிடுவதற்கான போதுமான குறிகாட்டியாக இருக்கமாட்டாது. ஏனெனில் மனித அபிவிருத்தி பரந்துபட்ட கருத்தையும் மனித வாழ்வின் பல கூறுகளைக் காட்டும் எண்ணக்கருக்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. நீளமான ஆரோக்கியமான வாழ்க்கை, அறிவுடமை, கௌரவமான வாழ்க்கைக்கும் தேவையான வளங்கள், உற்பத்திக்கான வினைத்திறன், அரசியல் பொருளாதார வாய்ப்புக்களை அனுபவிப்பதற்கான சுதந்திரமும் பாதுகாப்பும், பயத்திலிருந்து பாதுகாப்பு, சுயகௌரவத்தை நிலைநிறுத்தல், பொருத்தமான மேலாதிக்கத்தைக் கடைப்பிடித்தல், மக்களின் சமூகப் பங்கேற்புப் போன்ற பல விடயங்களை உள்வாங்குவதன் மூலம் மனித அபிவிருத்தியைச் சரியான முறையில் அளவிடமுடியும்.

மனித அபிவிருத்தி சுட்டெண் பல்வேறு நாடுகள், பிராந்தியங்களுக்கிடையிலான மனித வள அபிவிருத்தியின் அடைவுகளை வரிசைப்படுத்தும் நோக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சுட்டெண் மூன்று அடிப்படைப் பரிமாணங்களினை மனித ஆற்ற லின் அடைவுகளின் அடிப்படையில் கொண்டிருக்கின்றது. அவையாவன.

1. நீண்ட ஆரோக்கியமான வாழ்வு
2. கல்வியுடமை / அறிவு
3. கௌரவமான வாழ்க்கைத்தரம்

இம் மூன்று விடயங்களினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில்

1. ஆயுள் எதிர்பார்க்கை
2. கல்வித்தரம்
3. கௌரவமான வாழ்க்கை

இங்கு நீண்ட ஆயுள் என்பது பிறப்பிலிருந்து இறக்கும் வரை அவன் வாழுகின்ற சராசரி காலத்தினைக் குறித்து நின்கின்றது.

கல்வி அறிவு என்பது வயது வந்தோர் எழுத்தறிவு விகித்ததுடன் ஆரம்ப இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கல்வியில் மக்களின் பங்கேற்பு என்பவற்றைத் தொகுத்ததாகக் கணிக்கப் படுகின்றது.

கௌரவமான வாழ்க்கை என்பது வாழ்க்கை தரத்தை குறிக்கின்றது. இது தலா உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படும். அதாவது ஐக்கிய அமெரிக்க டொலர்களினால் இது கணிக்கப்படுகின்றது.

மனித அபிவிருத்தி சுட்டெண்ணின் படி உலகில் உள்ள நாடுகளை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. சுட்டெண் 0.5ஐ விடக் குறைவாக உள்ள நாடுகள் குறைந்த மனித அபிவிருத்தியைக் கொண்ட நாடுகள் எனப்படும்.
2. சுட்டெண் 0.5 - 0.799 க்கும் இடைப்பட்ட நாடுகள் நடுத்தர மனித அபிவிருத்தியை கொண்ட நாடுகள் எனப்படும்.
3. சுட்டெண் 0.8 அல்லது அதைவிட அதிகமாக உள்ள நாடுகள் உயர்ந்த மனித அபிவிருத் தியைக் கொண்ட நாடுகள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மனித அபிவிருத்திச் சுட்டெண் மனித அபிவிருத்தியைப் பல்வேறு கோணங்களில் அறிமுகம் செய்தபோதும் சில குறைபாடுகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இச்சுட்டெண் ஒரு புள்ளிவிபரச் சராசரியாகும். மனித அபிவிருத்தியின் முழு விபரங்களையும் இச்சுட்டெண் பிரதிபலிக்கும் எனக் கூறமுடியாது. இச்சுட்டெண்ணைப் பயன்படுத்த வேறுபட்ட குழுக்களின் தராதரங்களை அறியமுடியாது. இனம், மதம், பால்நிலை சார்ந்த பல குழுக்களின் அபிவிருத்தி நிலையினை இச்சுட்டெண் பிரதிபலிக்கமாட்டாது.

தென்னாபிரிக்கா, வெனிசூலா. மொரோக்கோ, இந்தியா போன்ற நாடுகளில் பிராந்திய இன, மத அடிப்படையிலான மனித அபிவிருத்தி முரண்பாடுகள் காணப்படுகின்றன எனக் குறை கூறப்படுகின்றது. மனிதனின் தீர்மானம் எடுத்தல், சமூக மற்றும் அபிவிருத்திப் பங்கேற்றல் போன்வற்றை இச்சுட்டெண்ணின் கூறுகள் உள்வாங்கவில்லை எனவும் மனிதன் பார்வையாளராக இருக்கிறானா அல்லது பங்காளிகளாக இருக்கிறானா என்பதனை HDI ஐ கொண்டு அறிய முடியாது எனவும் விமர்சனங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

மனித அபிவிருத்திச் சுட்டெண் முழு மனித சமுதாயத்துக்குமான பொதுவான குறிகாட்டியாகும். பால் அடிப்படையில் ஆண், பெண்களின் அபிவிருத்தி நிலையை இச்சுட்டெண் சரியாகப் பிரதிபலிக்கமாட்டாது. 1990 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மனித அபிவிருத்திச் சுட்டெண்ணானது ஆண்கள், பெண்கள் ஆகியோரின் ஒட்டு மொத்தக் கணிப்பாகவே கணிக்கப்பட்டு வந்தது. பெண்களின் அபிவிருத்தி, ஆண்களின் அபிவிருத்தி என்று பிரித்து சராசரி வீதங்களினைக் கணிப்பிடத் தவறி விட்டது. இன்றைய காலகட்டங்களில் பெண்களின் அபிவிருத்தி என்பது மிகமுக்கியமானது. பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட துறைகளில் பெண்களின் நுழைவு பெண்களின் அபிவிருத்திக்கான பங்களிப்பு பெறுமதியிட முடியாததாகும். இதற்குப் பெறுமதியிடல் நடவடிக்கைகள் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் சமூக பொருளாதாரக் கட்டமைப்பினை மாற்றியமைப்பதாக அமையக்கூடும் என மனிதவள அறிக்கை கூறுகின்றது.

பால் நிலை அபிவிருத்தியைச் சரியான முறையில் அளவிடுவதற்காக இரண்டு சுட்டெண்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அவை பால்நிலை அபிவிருத்தி சுட்டெண் (Gender Related - Development Index - GDI). பால்நிலை மேலாதிக்க அளவீடு (Gender Empowerment Measure - GEM) ஆகிய சுட்டெண்களாகும். GDI பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

1. ஆயுள் எதிர்பார்க்கை
2. கல்வி அறிவு வீதம்
3. ஆரம்ப, இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வியில் ஆண், பெண்களின் பங்களிப்பு வீதம்

மேற்கூறப்பட்ட மூன்று விடயங்களிலும் ஆண்கள், பெண்கள் என்பவற்றின் பங்களிப்பு வீதங்களை அளவிட்டுக் கூறுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். கல்வியைப் பொறுத்தவரை கல்வியின் மூன்று படித்தரங்களிலும் பெண்களின் தேறிய பங்களிப்பு கணக்கில் கொள்ளப்படுகின்றது. பிறப்பில் ஆயுள் எதிர்பார்க்கை, மொத்தக்கருவளம், கர்ப்பிணிப் பெண்களின் மரணவீதம் என்பனவும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. குடும்ப வருமானத்தில் பெண்கள் உழைப்பின் பங்கும் உள்வாங்கப்பட்டுள்ளது.

பெண்களின் அபிவிருத்தி நிலையை அளவிடுவதற்கு அறிமுகம் செய்யப்பட்ட மற்றொரு சுட்டெண் பால்நிலை மேலாதிக்க அளவீடு (Gender Empowerment Measure - GEM) ஆகும். பால் நிலை மேலாதிக்க

அளவீடு என்பது முகாமைத்துவம், நிர்வாகம் போன்ற தலைமைத்துவப் பொறுப்புக்களில் பெண்களின் பங்களிப்பினைச் சுட்டிக் காட்டு கின்றது. இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

1. பெண்களின் பாராளுமன்றப் பிரதி நிதித்துவம், இது பெண்களின் அரசியல் பங்கேற்பை உறுதிப்படுத்தும் ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. பாராளுமன்ற அங்கத்துவம் மட்டுமன்றி மாகாண சபைகள், மாநகர மற்றும் நகர, பிரதேச சபைகளின் பிரதிநிதித்துவத்தையும் கவனத்தில் கொள்கின்றது.
2. பெண்களின் நிர்வாக தலைமைத்துவப் பொறுப்புகள், நிறுவனங்கள், திணைக் களங்கள், அமைச்சுச் செயலாளர் பொறுப் புக்கள் என்பவற்றில் பெண்கள் தலைமை நிர்வாகிகளாக, முகாமையாளர்களாக எந்தளவு பணிபுரிகின்றனர் என்பதனைக் குறிப்பிட்டு நிற்கின்றது.
3. உயர் மட்ட பதவிநிலைத் தொழில்கள் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பு, உயர்பதவிகள், நிர்வாக கட்டத்திலான பதவிகள், வெளிநாட்டு சேவைகளில் பங்கேற்பு, தொழில்நுட்ப அறிவியல் பங்களிப்பு, தொழில்நுட்ப ஆய்வுகளில் ஈடுபாடு போன்றவற்றில் பெண்கள் எந்தளவு பங்கேற்று வருகின்றனர் என்பதனை இது காட்டுகின்றது.
4. உழைக்கும் வருமானத்தில் தேசிய மட்டத்திலோ குடும்ப மட்டத்திலோ பெண்களின் பங்கு, மொத்தத் தேசிய வருமானத்தில் பெண்களின் பங்கு என்ன, தமது குடும்ப வருமானத்தில் அவர்களின் பங்கு என்ன என்பதனை இது குறிப்பிடுகின்றது. அதாவது குடும்ப அடிப்படையிலானநுண்பாகமட்டத்திலும் தேசிய ரீதியாக பேரண்ட மட்டத்திலும் பெண்களின் வருமானப் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்ற விடயம் இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

பொதுவாக இவ்விடயகள் ஒரு நாட்டின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் பெண்களின் பங்கேற்பு எந்தளவு காணப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள உதவுகின்றன. இதுவரை அளவிடப்பட்ட சுட் டெண்களில் மிக உயர்ந்த அளவு 0.8 ஆகக் காணப்படுகின்றது. பத்து நாடுகளிலேயே இச்சுட்டெண் 0.6 ஐ விட உயர்வாகக் காணப் பட்டது. நோர்வே. சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகள் உயர்ந்த சுட்டெண்ணைக் கொண்டுள்ளன.

மனித அபிவிருத்தியை அளவிடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் அறிமுகப்படுத் தப்பட்ட மனித அபிவிருத்திச் சுட்டெண் ஆனது சில குறைபாடுகளைக் கொண்டு காணப் பட்டாலும் இச்சுட்டிகளின் செயற்பாடானது பயனுள்ள வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (Human Development Reports 2000 - 2007), (மனித உரிமைகளும் அபிவிருத்தியும் - 2006)

தற்போது இலங்கையின் தலாவரு மானமானது 3530 U$ஆகக் காணப்படுகின்றது. இலங்கையின் ஆள்வீத வருமான அதி கரிப்பு, மானிய முறைக்கொள்கை, சனசவிய, சமுர்த்தி போன்ற திட்டங்கள் தொழில் வாய்ப்புக்களை அரசாங்கம் வழங்குகின்றமை, வெளிநாட்டுக்காரணி வருமானங்கள், உலகமயமாதல் போன்றனவும் இலங்கையில் வருமான மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தி யுள்ளது. இலங்கையின் மனித அபிவிருத்தியில் இலங்கையின் அரசியல் நெருக்கடிகள், மனித பாதுகாப்புக்கு உத்தரவில்லாத நிலை, அரசியல் மாற்றங்கள் அரசியல் ஸ்திரமற்ற தன்மை, அரசியல் பழிவாங்கல்கள், சர்வ தேச பொருளாதார நெருக்கடிகள், அதி கரித்து வருகின்ற குற்றச்செயல்களும் அதனால் ஏற்பட்டுள்ள மன அழுத்தங்கள் போன்ற தடையாக காணப்பட்டாலும்,

இலங்கையினுடைய மனித அபிவிருத்தியானது ஏனைய நாடுகளுடனும் உலகளவிலும் நோக்குகின்றபோது குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றது. மனித அபிவிருத்திச் சுட்டிகளில் அண்மைய ஆண்டுகளில் ஏற்பட்ட அபிவிருத்தியானது அபிவிருத்தி அடைந்த ஒரு நாட்டின் மட்டத்தை நெருங்கியதாகக் காணப்படுகின்றது.

## Bibliography


1. ஹேறவாவிதாரண, பீ. 1994 ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான ஒரு அணுகுமுறை என்ற வகையில் மனித மூலவளங்களின் அபிவிருத்தி, பொருளியல் நோக்கு, மார்ச் 1994
2. விஜய ஜயதிலக 2000 மனித உரிமைகளின் பிற்புலத்தில் வறுமை ஒழிப்பு. பொருளியல் நோக்கு, நவம்பர் - டிசம்பர் 2000, மக்கள் வங்கி வெளியீடு, கொழும்பு.
3. சண்முகலிங்கம். க. (2006) "மனித உரிமைகளும் அபிவிருத்தியும்", அகவிழி பதிப்பகம், கொழும்பு 07
4. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் (2005 - 2015)
5. UNDP, Human Development Reports (1999)
6. UNDP, Human Development Reports (2007)
7. UNDP, Human Development Reports (2008)
8. www.koodal.com
9. www.wikipedia.org